**அனுப்புநர்**

திரு.க.செல்வகுமார், M.A., B.Ed.,
இணை இயக்குநர் (மேல்நிலை),
அரசுத் தேர்வுகள் இயக்ககம்,
சென்னை – 600 006.

**பெறுநர்**

1. அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள் / இணை இயக்குநர் (கல்வி), புதுச்சேரி.
2. அனைத்து மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள்,

**ந.க.எண். 006841 / எப்1 / 2024** **நாள் : 28.06.2024**

**ஐயா/அம்மையீர்,**

**பொருள் :** அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை – 6 – மேல்நிலை முதலாம் ஆண்டு துணைத் தேர்வு ஜூலை 2024 – தனித்தேர்வர்களுக்கு செய்முறைத் தேர்வுகள் நடத்துதல் – அறிவுரை வழங்குதல் – தொடர்பாக.

-----

நடைபெறவுள்ள ஜூலை 2024, மேல்நிலை முதலாம் ஆண்டு துணைத் தேர்வுகளுக்கென அமைக்கப்பட்டுள்ள தேர்வு மையங்களின் முதன்மைக் கண்காணிப்பாளர்களுக்கு தேர்வு மையத்தில் தனித்தேர்வர்களுக்கு செய்முறைத் தேர்வுகள் நடத்துதல் தொடர்பாக கீழ்க்காணும் அறிவுரைகளை வழங்குமாறு அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

1. தேர்வு மைய முதன்மைக் கண்காணிப்பாளர்கள் தனித்தேர்வர்களுக்கு செய்முறைத்தேர்வு நடத்தப்படும் தேதி மற்றும் இடம் குறித்த அறிவிப்பினை முன்கூட்டியே தெரிவிக்க வேண்டும். மேலும், இவ்விவரத்தினை அறிவிப்பு பலகையிலும் ஒட்டி வைக்க வேண்டும்.
2. **ஏற்கனவே செய்முறைத் தேர்வில் பங்கேற்காதவர்களுக்கு மட்டும் தற்போது 15 மதிப்பெண்களுக்குசெய்முறை புறத் தேர்வு நடத்தப்பட வேண்டும்.**
3. மேல்நிலை முதலாம் ஆண்டு செய்முறை புறத் தேர்வினை புதிய பாடத்திட்டத்தில் மட்டுமே அனைத்து தனித்தேர்வர்களுக்கும் நடத்தப்பட வேண்டும்.
4. **தனித்தேர்வர்கள் செய்முறைப் பதிவேடு மற்றும் திறன் மதிப்பீட்டிற்கான மதிப்பெண் விவரத்தினை தாங்கள் பயின்ற பள்ளித் தலைமையாசிரியரிடமிருந்து பெற்று வழங்கினால், அதனடிப்படையில் அவற்றுக்கான (5) மதிப்பெண்களையும், செய்முறை புறத்தேர்வு மதிப்பெண்களையும் சேர்த்து வழங்க வேண்டும் (செய்முறைப் பதிவேடு –3, திறன் மதிப்பீடு –2 மற்றும் செய்முறை புறத்தேர்வு –15, மதிப்பெண்கள் மொத்தம் –20 மதிப்பெண்கள்).**

..2..

5. அரசாணை எண் (2டி) 50, பள்ளிக்கல்வித் (ஜிஇ1)துறை, நாள்.09.08.2017–ன்படி செய்முறைத் தேர்வுள்ள பாடங்களில் தேர்ச்சிப் பெறுவதற்கு எழுத்துத் தேர்வில் 70 மதிப்பெண்களுக்கு குறைந்தபட்சம் 15 மதிப்பெண்கள் பெற்று செய்முறைத் தேர்வில் கட்டாயம் பங்கேற்றிருக்க வேண்டும். மேலும், எழுத்துத்தேர்வு, அகமதிப்பீடு மற்றும் செய்முறை தேர்வு ஆகியவற்றில் ஒட்டு மொத்தமாக 100–க்கு குறைந்த பட்சம் 35 மதிப்பெண் பெற்றிருக்கவேண்டும். செய்முறைத்தேர்வில் பங்கேற்காமல், தேர்ச்சிக்கான குறைந்த பட்ச மதிப்பெண்(35) பெற்றிருந்தாலும், அத்தேர்வர்கள் தேர்ச்சி பெறாதவர்களே ஆவர்.

6. அரசாணை (நிலை) எண். 61, பள்ளிக் கல்வித் (அ.தே) துறை, நாள்.29.02.2024–ன்படி செய்முறைத் தேர்வடங்கிய கருத்தியல் பாடங்களில் கருத்தியல் தேர்வில் 70 மதிப்பெண்களுக்கு குறைந்தபட்ச தேர்ச்சி மதிப்பெண்கள் 15 அல்லது அதற்கு மேல் பெற்று, செய்முறைத் தேர்வில் பங்கேற்காத தேர்வர்கள் செய்முறைத் தேர்வினை மட்டும் எழுத வேண்டும்.

மேல்நிலை முதலாம் ஆண்டு செய்முறைத் தேர்வு நடத்தப்படும் தனித்தேர்வர்களின், மதிப்பெண்களை பதிவு செய்வதற்கான மதிப்பெண் பட்டியல் படிவம் இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகிறது. **மேல்நிலை முதலாம் ஆண்டு செய்முறைத் தேர்வு தொடர்பான படிவத்தினை பூர்த்தி செய்து**, பள்ளித் தலைமையாசிரியர் / முதன்மைக் கண்காணிப்பாளர் சம்பந்தப்பட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகத்தில் **11 .07.2024–க்குள்** ஒப்படைக்க வேண்டும்.

மேலும், மேற்குறிப்பிட்டவாறு தனித்தேர்வர்களுக்கான தேர்வு மையங்களின் முதன்மைக் கண்காணிப்பாளர்களிடமிருந்து பெறப்படும் மதிப்பெண் பட்டியல்களை அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள் பெற்றுக் கொண்டு, அதன் விவரங்களை பட்டியலாக Excel sheet–ல் dgef4sec@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு 12.07.2024 **–க்குள்** அனுப்பி வைக்குமாறு தெரிவிக்கப்படுகிறது.

**இணைப்பு:**

1. வெற்று மதிப்பெண் பட்டியல் படிவம்
2. +1 தனித் தேர்வர்களுக்கான தேர்வு மையங்களின் விவரம்

**ஒம்/–**

**இணை இயக்குநர் (மேல்நிலை)**

**நகல்**

1. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்.
2. கண்காணிப்பாளர், எப் 4, பிரிவு (அலுவலகம்)

## HSE FIRST YEAR SUPPLEMENTARY EXAMINATION, JUNE/JULY -2023
## PRACTICAL MARK SHEET (NEW PATTERN)

### (Who have not already appeared for Practical Exam)

| SL NO | PERMANENT REGISTER NUMBER | ROLL NUMBER | NAME | SUBJECT CODE | PRACTICAL | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | SUBJECT NAME | MARK | | | REMARKS |
| | | | | | | EXTERNAL | INTERNAL | TOTAL | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |

Signature of the Chief Superintendent

Centre Seal.